1967 ஜூலை 13]

சேத்தியாதோப்பு அணைக்கட்டு

*315 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, சேத்தியாதோப்பு அணைக்கட்டு பஸ் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக ரொம்பவும் குறுகி இருப்பதால் அதை புதுப்பித்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) and (இ) உறுப்பினர் குறிப்பிட்ட வேலையை மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துப் கொள்வதற்கான ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு வழியாக போக்குவரத்து அதிகம் இருக்கிறது. இப்போது தமிழக அரசு பஸ்களும் போகின்றன. ஆகவே உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்கு சாலை நிதி ஒதுக்கத்தில் 129 லட்சம் ஒதுக்கப்பட வேண்டும். அது ஒதுக்கப்படுகிற நேரத்தில், இந்தப் பால வேலை எடுத்துக்கொள்ளப்படும். பொறியாளர்கள் இதற்கான வரைப்படத்தையும், மதிப்பீட்டினையும் தயார் செய்து வருகிறார்கள். 20 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்கிறார்கள். ஆகவே அந்த நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Tahsildars in Kanyakumari district

*316 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) how many Tahsildars are there from other Districts working in Kanyakumari district, and

(*b*) if so, on what special grounds they have heen posted to this district ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Two Tahsildars from Tirunelveli district are working in Kanyakumari district.

(*b*) Qualified Tahsildars are not available in Kanyakumari district.

THIRU A. CHIDAMBARANATHA NADAR : Sir, may I know who are the Tahsildars from other districts who are working now in the Kanyakumari district ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not expected to know the names of each tahsildar. Perhaps the hon. Member because of his familiarity with the Kanyakumari district may have known those names.